திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், வள்ளிபுரம் கிராமத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 10,000 வீடுகளில், 507 வீடுகள் ரூ.13 கோடியில் கட்டிமுடிக்கப்பட்டு அந்தப் பகுதியில் நெசவாளர்கள் பொது மக்கள் அனைவரும் குடியேறிவிட்டார்கள். அந்தப் பகுதியினை சென்ற ஆண்டு நமது மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் பார்வையிட்டார்கள். அப்பகுதியில் கிட்டத்தட்ட 4 கி.மீ. தூரத்திற்கு சாலைகளை அமைக்க வேண்டியுள்ளது. அந்தப் பணியினைச் செய்து தருவதாக உறுதியளித்துவிட்டு வந்தார்கள். இன்னும் அந்தப் பணிகள் நடைபெறவில்லை. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அந்தச் சாலையினை அமைத்து, நெசவாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையினை துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

194—

மீனவர்களுக்கான உதவித் தொகை

***4297—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2017 ஜூலை 13]

மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, மானிய டீசல் மற்றும் மண்ணெண்ணெய்யை உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விடை, ஆம். 2017–2018 ஆம் ஆண்டிற்கு மீன்பிடிப்பு தடைக்காலத்தில் வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/–மாக உயர்த்தியும், 2016–2017 ஆம் ஆண்டு முதல் சிறப்பு நிவாரணத் தொகை ரூ.4,000/–த்தினை ரூ.5,000/– ஆக உயர்த்தியும், தேசிய/தமிழ்நாடு கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு, மீனவ மகளிருக்கு வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை 2017–2018 ஆம் ஆண்டு முதல் ரூ.2,700/–லிருந்து ரூ.4,500/–ஆக உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளபடி, விற்பனை வரியிலிருந்து விலக்களித்து, இயந்திர மீன்பிடிப் படகு ஒன்றிற்கு வழங்கப்படும் டீசலின் அளவினை ஆண்டு ஒன்றிற்கு 15,000 லிட்டரிலிருந்து 18,000 லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகு ஒன்றிற்கு வழங்கப்படும் டீசலின் அளவை, ஆண்டு ஒன்றிற்கு 3,600 லிட்டரிலிருந்து 4,000 லிட்டராக உயர்த்தியும், விற்பனை வரியிலிருந்து விலக்களித்து, இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகு ஒன்றிற்கு லிட்டருக்கு ரூ.25/– என்ற மானிய விலையில் வழங்கப்படும் மண்ணெண்ணெய்யின் அளவினை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஆண்டு ஒன்றிற்கு 3,000 லிட்டரிலிருந்து 3,400 லிட்டராக உயர்த்தி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, மீண்டும் உதவித் தொகை உயர்த்தி வழங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இதற்கு மேல் கேள்வி கேட்கப்போகிறீர்களா?

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அறிவித்த மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை தமிழகத்திலே, முதன்முதலில் வழங்கியது*

நம்முடைய கலைஞருடைய அரசு என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மீன் பிடித் தடைக்காலம் 45 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. 45 நாட்களாக இருந்த நேரத்தில், இந்த அரசு 5 ஆயிரம் ரூபாயாக நிவாரணத் தொகையை அறிவித்தது. இன்றைக்கு 60 நாட்களாக உயர்த்தப்பட்டிருக்கின்ற நிலையிலே, மீனவர்கள் அந்த உதவித் தொகையைக் கூடுதலாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து வருகின்றார்கள். அதேபோல, கடந்த தி.மு.க. ஆட்சியிலே,— அதற்கு முன்பிருந்த ஆட்சியில் 1,000 லிட்டர் டீசல் மானியம் என்றிருந்த அளவை, ஐயா கலைஞர் அவர்களுடைய அரசிலேதான் 1,500 லிட்டராக உயர்த்தி வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அன்றைக்கு 1,000 லிட்டர் என்றிருந்த டீசல் மானியத்தை 1,500 லிட்டராக கலைஞருடைய அரசு உயர்த்தி வழங்கியது. அதற்குப் பிறகு 1,500 லிட்டராக இருந்த டீசல் மானியத்தை இப்பொழுதுள்ள அரசாங்கம், 300 லிட்டரை மட்டுமே அதிகமாக உயர்த்தி வழங்கியிருக்கின்றது. அதனையும் கூடுதலாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நாட்டுப் படகுகள், கட்டுமரங்கள், fibre படகுகள் போன்ற படகுகளுக்கு வழங்கப்படக்கூடிய டீசல் அளவையும் கூடுதலாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமேஸ்வரம், தூத்துக்குடி, ஆகிய மாவட்டங்களில் மண்ணெண்ணெய் உயர்த்தி வழங்கப்படுகிறது என்று தெரிவித்தார். அதனை ஒரே முறையாக வழங்காமல், மாதத்திற்கு மூன்று முறை, அதாவது 10 நாட்களுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் 75 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. அது மீனவர்களுக்குச் சிரமத்தை அளிக்கிறது. அதை ஒரே முறையாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடித் தடைக்காலத்தைப் பொறுத்தவரை,

2017 ஜூலை 13]

அவர்கள் கொடுத்த நிவாரணத் தொகை 1,000 ரூபாய். ஆனால், அந்த 1,000 ரூபாயை 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கிய ஒரே முதலமைச்சர், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஏதோ ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாள் ஆக்குகிற வித்தையெல்லாம் எனக்குத் தெரியாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தியாவிலேயே எங்கும் இல்லாத வகையில் மீனவர்களுக்கு* special allowance *வழங்கும் திட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். இதிலிருந்து எந்த அளவிற்கு கடற்கரையோர மீனவர்களின் நலனில் அக்கறைகொண்டது இந்த அரசு என்பது புரியும். நவம்பர், டிசம்பர் மாதங்கள் மீன் பிடிக் குறைவு காலங்கள். அந்த மீன்பிடிக் குறைவு காலங்களிலேகூட மீனவக் குடும்பங்கள் கஷ்டப்படக் கூடாது என்ற அடிப்படையிலே, ஒவ்வோர் ஆண்டும் 5,000 ரூபாயை நிவாரணமாக வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டுவந்த ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்கூட இன்றைக்கு அதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, இதுவெல்லாம் புது திட்டம். இந்தியாவில் எங்கும் கிடையாது.*

அதேபோல மீனவர் சேமிப்பு நிவாரணம்; 1991 ஆம் ஆண்டுக் காலத்தில் 1,080 ரூபாயாக இருந்தது. 1996 ஆம் ஆண்டுக் காலத்தில் அதை உயர்த்தினீர்களா? உயர்த்தவில்லை. 2001–ல் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், அத்தொகையை 2,700 ரூபாயாக உயர்த்தினார்கள். 2006 ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். அப்பொழுது அத்தொகையை உயர்த்தினீர்களா? ஆனால், 2011 ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஒவ்வொரு மீனவ மகளிரும், மீனவரும் ரூ.4,500 வீதம் நிவாரணம் வாங்கக்கூடிய நிலைமையை உருவாக்கிய ஓர் அரசு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) கேட்டுக்கொள்ளுங்கள்; ரூ.4,500 + ரூ.4,500 = ரூ.9,000/–; Special Allowance *ரூ.5,000; மீன் பிடித் தடைக்கால நிவாரணம் ரூ.5,000; ஆக மொத்தம் இந்தியாவில் வேறு எங்கும் மீனவர்கள் பெறாத வகையில், தமிழகத்தில்*

ஒவ்வொரு மீனவக் குடும்பமும் 19,000 ரூபாயை வாங்கக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தித் தந்தது மாண்புமிகு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10—30

டீசலைப் பொறுத்தவரையில், 2006—2011 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு கால ஆட்சியில், நீங்கள் 200 கோடி ரூபாய் கொடுத்தீர்கள். ஆனால், 2011—2016 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுக் காலத்தில்,—டீசலுக்கான மாநில வரி 377 கோடி ரூபாய் அளவிற்கு இரத்து செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தை யார் கொண்டு வந்தது? நம்முடைய அம்மா அவர்கள்தான். சுனாமி வந்தவுடன், மீனவர்களின் கஷ்டத்தைத் தெரிந்து கொண்டு அம்மா அவர்களிடம் நாங்கள் சொன்னோம். உடனே அந்த டீசலுக்கான மாநில வரி அத்தனையும் இரத்து செய்த ஒரே முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்களுடைய 2006—2011 ஆட்சிக் காலத்தில் மண்ணெண்ணெய் மானியமாக எவ்வளவு கொடுத்தீர்கள்? 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் கொடுத்தீர்கள். ஆனால், அம்மா அவர்களுடைய ஆட்சியில் 169 கோடியே 48 இலட்சம் ரூபாயை அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே மீனவர் நலனுக்காக அதிக நிதி ஒதுக்கீடு வழங்கிய அரசு என்று சொன்னால், அது நம்முடைய அம்மாவினுடைய அரசுதான். இந்த நிதிநிலை அறிக்கையில்கூட மீன் வளத் துறைக்கு 768 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே இந்த அளவிற்கு அதிகமாக மீனவர்களின் நலனுக்காக நிதி ஒதுக்கீடு செய்த மாநிலம் எது என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாடுதான். அம்மாவினுடைய அரசை வழி நடத்துகின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இன்றைக்கு நிதி ஒதுக்கீடு செய்து அந்த வரலாற்றைப் படைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். மீனவர்களுக்காக நீங்கள் 5 ரூபாய் வழங்கியிருந்தால், நாங்கள் இப்போது 95 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்; வித்தியாசம் அவ்வளவு இருக்கிறது. கொஞ்சம் நஞ்சம் அல்ல. நீங்கள் தந்தது 5%; ஆனால், நாங்கள்

2017 ஜூலை 13]

95 சதவிகித அளவிற்கு நிதியை உயர்த்தித் தந்திருக்கிறோம். அந்த வகையில், மீனவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படக் காரணம், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, நம்முடைய முதல்வர் எடப்பாடி அண்ணன் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் கூறுகின்றபோது, கைகளை நீட்டி, அளவுகளைக் காட்டுகிறார். திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதெல்லாம் ஏற்பட்டிருக்கின்றதோ, அப்போதெல்லாம் மீனவ மக்களுக்குப் பல்வேறு சரித்திரச் சாதனைகளை படைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, சுனாமியைப் பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். சுனாமியின்போது ஒவ்வொரு மீனவருக்கும் 20 இலட்சம் ரூபாய் கடன் தொகை தரப்பட்டது. அந்தக் கடன் தொகையை, வங்கிகள் வசூலிக்கின்ற நேரத்திலே, மீனவர்களால் அதனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி, (குறுக்கீடு) நீங்கள் மீன் வளத் துறை மானியக் கோரிக்கையில், சிறப்பாகப் பேசினீர்கள். ஆனால், இப்போது ஒரு கேள்வி கேட்க ஆரம்பித்து, 7 நிமிடங்கள் ஆகிவிட்டன. இப்படிப் பேசினால், நான் எப்படி சபையை நடத்த முடியும்?*

திரு. கே.பி.பி. சாமி: *ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அமைச்சர் கேட்டதற்கு பதில் சொல்லிவிடுகிறேன். அப்படி சுனாமியின்போது வழங்கிய கடனை மத்திய அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற மீனவர்களின் தலைவர்களும், அமைச்சர் என்ற முறையில் நானும் சென்று, தலைவர் கலைஞர் அவர்களிடம் கேட்டபோது, அந்த சுனாமிக் கடன் 80 கோடி ரூபாயை தமிழக அரசே ஏற்கும் என்று தெரிவித்து, அதனைத் தள்ளுபடி செய்த தலைவர், கலைஞர் அவர்கள் என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையில் படிக்கின்ற மீனவர்களின் பிள்ளைகளுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தவரையில், கல்வி உதவித் தொகையாக மாதம் 300*

ரூபாய் வழங்கிய அரசு, அய்யா கலைஞர் அவர்களுடைய அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிறுத்திய அரசு உங்களுடைய அரசு என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில், குற்றச்சாட்டு மாதிரி சொல்லக்கூடாது என்று உங்களிடம் நான் எத்தனையோ முறை சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் ஏன் சொல்கிறீர்கள்? பிறகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்வார். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் குற்றம் சாட்டிச் சொல்லவில்லை. அவர்களுடைய ஆட்சியில் சில திட்டங்கள் செயல்படுத்தியது குறித்து அவர் தெரிவித்தபோது, "நீங்கள் செய்தது 5 சதவிகிதம் என்றால், நாங்கள் செய்தது 95 சதவிகிதம்" என்று அந்த வித்தியாசத்தைத்தான் நான் சொன்னேன். குற்றச்சாட்டாக நான் கூறவில்லை. சுனாமியைப் பொறுத்தவரையில், சுனாமி ஆழிப் பேரலை தாக்கியபோது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எல்லா மாவட்டங்களுக்கும் சென்றார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்பி, அங்கு என்னென்ன மீட்பு நடவடிக்கைகள், மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அறிந்து, எல்லா நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் எடுத்தார்கள்.

உதாரணத்திற்கு, இலங்கைகூட சுனாமியால் பாதிக்கப்பட்டது. அப்போது இங்கே நம் அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை எல்லாம், இலங்கை அரசாங்கம் பெருமையாகச் சொல்லி, இங்கிருந்து அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று அம்மாவிற்கு கடிதம் எழுதி கேட்டுக்கொண்டது. அதன்பிறகு நம்முடைய அரசு அதிகாரிகளை அனுப்பி, இலங்கையிலேயும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை எல்லாம் அம்மா அவர்கள் எடுத்தார்கள். அந்த வகையில் உலகத்திற்கே ஒரு முன்னுதாரணமாக இருந்த அரசு, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

2017 ஜூலை 13]

முற்பகல் 10–35

இரண்டாவது, 2004–ல் 200 கோடி ரூபாயை சுனாமிக்காக அம்மா அவர்கள் கொடுத்தார்கள். நீங்கள் 2006–ல் ஆட்சிக்கு வந்தீர்கள், எவ்வளவு கொடுத்தீர்கள்? 200 கோடி ரூபாய் கொடுத்தீர்கள். (குறுக்கீடு) 1,000 கோடி ரூபாய் அல்ல; 200 கோடி ரூபாய்தான் கொடுத்தீர்கள். 200 கோடி ரூபாய் கொடுத்தீர்கள். அதாவது, சுண்ணாம்பு கொடுத்ததுபோல் நீங்கள் கொடுத்தீர்கள். அதற்குப்பிறகு நாங்கள் ஆட்சிக்கு வந்து (குறுக்கீடுகள்) 2011–2016–ல் திரும்பவும் 300 கோடி ரூபாய் செலவு செய்தோம். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், தமிழ்நாட்டில் கடற்கரை ஓரங்களில் வாழுகின்ற நம்முடைய மீனவர்களுக்குத் தெரியும். அம்மா அவர்கள்தான் மீனவர்களைக் காக்கின்ற காவல் தெய்வம் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். எனவே, அந்த வரலாற்றை யாரும் மறைக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

195—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***6204—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.